ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து

பௌர்ணமி நன்னாளில்

**விசுவாவசு ஆண்டு கார்த்திகை திங்கள் முழுமதி ஆசியோடு**
**ஓங்காரக்குடிலுக்கும் தொண்டர் பெருமக்கட்கும்**
**ஆசி விளக்கம்**

04.12.2025

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
ஞானமோடு விசுவாவசு ஆண்டு
தேள் திங்கள் கார்த்திகை திங்களில்

2. பௌர்ணமி ஆசி விளக்கமாக
ஓங்காரக்குடிலுக்கும் தொண்டர் பெருமக்கட்கும்
குடிலின் நிர்வாகம் அன்னதான சேவைக்கும்
இனிதே அரங்கன் யான் ஆசிதனை அருளுவேன்

3. அப்பனே அரங்கன் யான்
ஆற்றல்பட இந்தவித நன்னாளில் இறங்கி
என் சீடனாம் ராம்குமார் கரம்பட
என்னோடு சண்முகநாதன் மகா ஞானியர் படைகளும்

4. அவரவர்கள் எந்த ஞானியை எண்ணி
பிறவித் தொடர்பில் வருகின்றாரோ
அவர்கட்கு ஏற்ற வண்ணம்
என் சீடன் கரம்பட

5. ஞானியர்கள் இறங்கி தீட்சை
இன்று வழங்குகின்றனர்
அன்னதனால் இன்று அரங்கன்
என் குடிலில் வந்து

6. தீட்சை பெறும் மக்களெல்லாம்
அவர்கள் வேண்டிய வண்ணம் வரங்களை
அடைந்து சிறப்பரப்பா அப்பனே
அரங்கன் யான் இந்தவித நன்னாளில்

7. அற்புதம்பட ஆற்றலை இறக்கி
அருளமுதிலும் ஜோதியிலும்
விசேடமான இந்த பூஜையிலும்
மகத்துவம்பட இறங்கி அருள் புரிகின்றேன்

8. அன்னதனால் இந்தவித நன்னாளில்
ஓங்காரக்குடில் நோக்கி வந்து

உயர்வான ஜோதி வழிபாடு செய்து
வகைபட அருட்பிரசாதமாம் குடில் அருளமுது உண்டு

9. வல்லமை கொண்ட என் தடம் அணுகி
இனிதே தீட்சை ஏற்ற மக்களெல்லாம்
இந்தவித நன்னாளில் அவர்கள் வேண்டல்
அத்தனையும் உடனே அரங்கேற

10. அவரவர்கட்கு காரிய சித்தியும்
ஆரோக்கியம் ஆயுள் கீர்த்தியென
அனைத்து சித்திகளும் உண்டாக
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு

11. வல்லமைபட இன்று விழாவில்
அரங்கன் ஆறுமுகப் பெருமான்
தலைமையேற்ற வண்ணம் எல்லா ஞானியர்களும்
சூட்சும வடிவிலே ஆசி தந்து

12. குடிலை காத்து வருகின்றனர்
அதனோடு குடில் தர்மத்திலும்
மகா சக்தி இறக்கி வருவோர்க்கெல்லாம்
பிணி நீக்கமோடு பிறவா பெரும்பேற்றுக்கு உண்டான

13. வல்லமையும் அருளமுதில் தந்துள்ளனர்
உள்ளபடி குடில் அமுது இன்று அருளமுதாகவும்
வல்லமை கொண்ட மகத்துவம் கூடிய
அமுதாகவும் மாறி ஆற்றல் தர

14. இந்தவித நன்னாளில் வந்தோர்க்கெல்லாம்
இனி வாழ்வில் ரோகம் இடர் பிற
கண்டம் அல்லல் அணுகாத வண்ணம்
பாதுகாப்பு கிட்டும் அரங்கன் யான்

15. ஓங்காரக்குடிலின் தர்மத்திற்கும்
உயர்வுபட பாதுகாப்பு தந்து செயல்பட
குடிலின் தர்மம் எக்காலமும்
குறைவின்றி விசாலமாக விரிவாக

16. பெருமளவில் தர்மம் வளரவும்
இந்த தர்மத்துக்கு தேவையான
பொருளாதார பலமும் தர்மத்தின் தொண்டுக்கு
குறைவில்லாத தொண்டர் படையும்

17. நிர்வாகத்தில் சிறப்பும் நிர்வாக மாந்தர்கட்கும்
உயர்வான நிலைகளும் அவர்கட்கும்

அவர் குடிக்கும் ஆரோக்கியம் பாதுகாப்போடு
என் தொண்டர் பெருமக்கட்கும்

18. அவர்களோடு அவர் குடி பாதுகாப்புக்கும்
அரங்கன் யான் பரிபூரண காவலாய் உள்ளேன்
உள்ளபடி கடல் தாண்டியும் உயர்வுபட என் தடத்தில்
வந்த மக்களுக்கெல்லாம் அவர்களுக்கும்

19. அவர்கள் தொடர்பு கொண்ட வண்ணம்
அவர்களின் தேசத்திற்கும் தேசத்திலுள்ள மக்களுக்கும்
அரங்கன் யான் மகா சக்தியாய்
பாதுகாப்பு தந்து அருள் புரிகின்றேன்

20. அன்னதனால் ஓங்காரக்குடிலின் இந்தவித விழா
மிகச்சிறப்பானது உயர்வுபட விழாவை
நிர்வகிக்கும் அன்பர்களும் விழாவை
சிறப்பிக்கும் வண்ணம் தொண்டாற்றும்

21. என் தொண்டர் பெருமக்களும்
அரங்கன் என் பரிபூரண ஆசியில் உள்ளனர்
உள்ளபடி அவரவர்கள் வேண்டல்
உயர்வாக அனைத்தும் படிப்படியாய்

22. இனிதாய் அரங்கேறி அவர்களுடைய
சந்ததிகளும் ஞானவான்களாய்
அவர்களுடைய வம்சா வம்சவழி அத்தனையும்
அரங்கன் எந்தன் வழியே

23. ஞானவான்களாக ஞானிகளாகத் தேறி
இந்த கலியுகமே ஞானயுகமாக மாற்றம் பெறும்
அவ்வாறு அற்புதத்தை அரங்கன்
ஓங்காரக்குடிலிலிருந்து ஆறுமுகனாரும்

24. ஆற்றல்பட செயல்படுத்த
அன்னதனால் குடில் நோக்கி
வருவதற்கும் குடில் தொண்டில்
பங்களிப்பு கொள்வதற்கும்

25. குடில் தர்மத்தில் பொருளுதவி செய்வதற்கும்
குடிலின் அருளமுதை உண்பதற்குமே
ஒரு பெரும் பாக்கியம் வேண்டும்
அவ்வாறு தொடர்பு கொண்டோரெல்லாம்

26. ஞானவான்களாவர் ஞானிகளாகவும்
மாற்றம் பெறுவர் என்பது உண்மை உண்மை

அன்னதனால் அரங்கன் யான்
இன்று அற்புதம் நிகழ்த்தி உள்ளேன்

27. இன்னும் விழாக்களில் வருகின்ற காலங்களிலும்
பெரும் மாற்றங்களும் நிகழ்வும் அற்புதமும் நிகழ்த்தி
முழுமதி தோறும் அரங்கன் யான்
மகத்துவத்தை வழங்கி ஓங்காரக்குடிலின் பெருமையும்

28. உலகளாவிய வண்ணம் ஆங்காங்கே
இன்னும் பல கிளைகள் உருவாகி
தர்மம் பெருகவும் வளரவும்
தக்கபடி மக்களெல்லாம் தர்மவான்களாக சிறந்து

29. இந்த யுகத்தில் கெடுதியான செயல்பாடுகள்
குறைவான நிலைகள் அத்தனையும் அகன்றுமேவி
நல்லோர்கள் செயல்பாடாக நன்மைகளாக மாறி
உலகமே பாதுகாப்பு பெற அரங்கன் யான்

30. வழிவகை செய்வேன் அரங்கன் என் அருள்பட
இன்றும் அற்புதத்தை நிகழ்த்தி உள்ளேன்
என் சீடன் ராம்குமார் செயல்பாட்டின் வழி
அன்னவனுக்கு ஆறுமுகப் பெருமானே வந்து

31. சண்முக தீட்சை எனும் தீட்சையை வழங்க
கட்டளையிட்டுள்ளதாலே சண்முக தீட்சை என்பது
முருகப்பெருமான் மகத்துவம் பொருந்திய சடாட்சரத்தின்
மகா சூட்சுமம்தான் அரங்கன் ஆரம்பகாலம் தவத்தில்

32. எனக்கு கிட்டிய எனக்கு முருகப்பெருமான்
தந்த தீட்சைதான் அது அந்த அற்புதத்தை
என் சீடர் பெருமக்களெல்லாம் அடைய வேண்டும்
என்பதற்காகவே இன்று உத்தரவாக மகனிவற்கு வந்துள்ளது

33. அன்னதனால் இன்று தீட்சை ஏற்ற மக்களெல்லாம்
பரிபூரணமாய் அரங்கன் என் அனுகூலத்தோடு
இந்தப் பிறவியில் பிறவாப் பெரும்பேற்றை எட்டுவது உறுதி உறுதி
அரங்கன் யான் அருளிய ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி